குயில்

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 24 — 3 — 59 செவ்வாய் | இசை: 42

அவர் யாவர்?

நல்லவர் என்பவர் யாவர்? - அவர்
நல்லது செய்பவர் ஆவர்
அல்லவர் என்பவர் யாவர்? - அவர்
அறம் மறந்தவர் ஆவர்.
வல்லவர் என்பவர் யாவர்? - அவர்
வம்பர்க்கஞ் சாதவர் ஆவர்.
இல்லவர் என்பவர் யாவர்? - அவர்
எத்தர்க்குத் தந்தவர் ஆவர்!

அறம் உடையவர் யாவர்? - அவர்
அகம் தூயார் ஆவர்.
திறம் உடையவர் யாவர்? - அவர்
செந்தமிழ் காப்பவர் ஆவர்.
நிறம் உரைப்பவர் யாவர்? - அவர்
நெஞ்சற்ற பார்ப்பனர் ஆவர்.
மறம் உடையவர் யாவர்? - அவர்
மாற்றுரை மாய்ப்பவர் ஆவர்!

காதல் உடையவர் யாவர்? - தமிழ்
காணத் துடிப்பவர் ஆவர்.
சாதல் அடைபவர் யாவர்? - அவர்
தமிழ் மறந்தவர் ஆவர்.
ஈதல் உடையவர் யாவர்? - தமிழ்
ஏற்றத்துக் கீபவர் ஆவர்.
மோதல் உடையவர் யாவர்? - பகை
முன்சென்று தாழ்பவர் ஆவர்!

ஆத்திகர் என்பவர் யாவர் ? - அவர்
அறிவு கெட்டவர் ஆவர்.
நாத்திகர் என்பவர் யாவர் ? - அவர்
நல்லறி வாளர்கள் ஆவர்.
சீர்த்தியர் என்பவர் யாவர் ? - அவர்
செந்தமிழ் மாந்தர்கள் ஆவர்.
தீத்தொழில் கொண்டவர் யாவர் ? - இங்குச்
சேர்ந்துள ஆரியர் ஆவர் !

கொன்றவர் என்பவர் யாவர் ? - இனக்
கொள்கையைக் கொன்றவர் ஆவர்.
வென்றவர் என்பவர் யாவர் ? - பகை
வென்றதை வென்றவர் ஆவர்.
சென்றவர் என்பவர் யாவர் ? - தொண்டு
செய்யாமல் செத்தவர் ஆவர்.
ஒன்றி உழைப்பவர் யாவர் ? - தமிழ்
ஒன்றுக் குழைப்பவர் ஆவர் !

நலம் விளைப்பவர் யாவர் ? - தமிழ்
நாட்டினை மீட்பவர் ஆவர்.
குலம் கெடுப்பவர் யாவர் ? - பகைக்
கூட்டத்தை நத்துவர் ஆவர்.
நிலம் ∞புரப்பவர் யாவர் ? - சிறை
நெருப்பும் நீர்என்பர் ஆவர்.
புலம் பழுத்தவர் யாவர் ? - பிறர்
⁝:புன்மறை வெறுத்தோர் ஆவர் !

∞ புரப்பவர்-காப்பவர்   ⁝: பிறர்புன்மறை-ஆரியர் கீழ்மையான வேதம்

பணம் படைத்தவர் யாவர் ? - வட
பாங்கில் இருப்பவர் ஆவர்.
குணம் படைத்தவர் யாவர் ? - தென்
கோடியில் உள்ளவர் ஆவர்.
மணம் படைத்தவர் யாவர் ? - தமிழ்
வாழத் தந்தவர் ஆவர்.
பிணம் நிகர்த்தவர் யாவர் ? - தமிழ்
பேண ஒப்பாதவர் ஆவர் !

(தொடர் கடைசிப் பக்கம்.)

புதுச்சேரி, தி. வ. ஆ ௧௯௯௦ பங்குனி ௧௧

சென்னை ஆளவந்தார்க்கு விண்ணப்பம்

தமிழக ஆளவந்தார்கள், புதுவையரசுக்குக் கீழுள்ள மக்களிடத்தும் சிறிது இரக்கம்காட்ட வேண்டும். அது தில்லியின் மேற்பார்வைக்கு உட்பட்டதுதானே என்று இருந்துவிடக் கூடாது.

தில்லி ஆளவந்தார் தில்லியில் இருக்கின்றார்கள்-புதுவை ஆயிரக்கணக்கான கல்லுக்கு இப்பால் இருக்கின்றது.

தில்லி ஆளவந்தார் புதுவையில் வந்துள்ள பெரிய அலுவலாளர்களின் சொற்படி தான் நடக்க முடியும். நேரிலிருந்து நிலைமையை நோக்குவது எப்படி?

புதுவையில் வந்து குமிந்துள்ள எல்லா அலுவல்காரர்களும் ஒருவகையான ஆட்கள். புதுவை மக்கள் பற்றிய கவலையில்லாதவர்கள்.

காரைக்காலில் விளையும் நெல்லை—அரிசியைப் புதுவைக்கே அனுப்பச் செய்ய வேண்டும் என்று புதுவை மக்கள் கரடியாய்க் கத்திப் பார்த்து விட்டார்கள்.

புதுவை அலுவல்காரர்களின் காதில் அக் குறைபாடு ஏறினாலும் காரைக்காலில் உள்ள அலுவல்காரர்களுக்குக் கைக்கூலி வராதொழியுமே என்ற கவலையால் கேளாக் காதர்போல் வாளாவிருக்கின்றார்கள்.

நிலைமை புதுவை மக்கள் சாக்காட்டை நெருங்குவதாயுள்ளது.

இரண்டு நாள்முன். புதுவை நோக்கி தமிழ் நாட்டரசின் எல்லையினின்று நெல்வந்து கொண்டிருந்தது. அதைத் தமிழக அரசு, தன் சட்டப்படி மறித்துவிட்டது.

காரையரிசி புதுவைக்கு வரும்படி செய்யவில்லை; இங்குள்ள அதிகாரிகள். வந்து கொண்டிருந்த அரிசி, நெல்லை வராது மறித்த தமிழக அரசை நோக்கிக் கெஞ்சவுமில்லை இங்குள்ள அதிகாரிகள்! அவர்கள் என்ன நினைக்கிறார்கள்?- புதுவை மக்களுக்குப் பிரஞ்சுக்காரர்மேல் பற்று ஏற்படவேண்டும். அதன் வாயிலாய்க் கிளர்ச்சி ஏற்படவேண்டும். சந்தடி சாக்கில் புதுவை மக்களின் சாக்கடையை அகப்பை கட்டிச் சுரண்ட வேண்டும். கைக்கூலியைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். வீடுகட்ட வேண்டும், கார் வாங்க வேண்டும் - இவ்வளவு தான் அவர்களின் எண்ணம்.

ஏதோ சிலர் புதியராக, நல்லவராக வந்துள்ள பெரிய அலுவல்காரர்களையும் ஒழித்துக் கட்டத்தான் பரபரப்பாக வேலை நடக்கிறது. இங்கே.

அரிசி இன்றி மக்கள் ஒழிவதில் அவர்கட்குப் பரபரப்பு ஏற்படவே இல்லை. ஏற்படப் போவதும் இல்லை.

தமிழக அரசினர் – அமைச்சர்கள் அங்குச் சேர்க்கும் அரிசியில் எமக்குப் போதிய அளவு உதவி செய்தால் அது உயிர்தந்ததாக இருக்கும்! இன்றைய விலை ஒரு ரூபாய்க்குப் பட்டணம் படி முக்காற்படி !!

நினைவுறுத்துகிறோம் . . . !

இயற்பெயரோ, புனைபெயரோ இன்றி வெளியிடப்பெறும் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்படுபவையே.

–அமைச்சர்,

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

மலம்

இது வடசொல் அன்று. மலமல என்பது ஒலிக்குறிப்பு மலம் கழித்தற்காலத்தில் ஏற்படுவ தன்றோ. மலமல என்பதன் அடியாகப் பிறந்த தூய தமிழ்க்காரணப்பெயரே மலம் என்பது. சலசல என்ற ஒலிக்குறிப்புச்சொல்லினடியாகச் சலம் தோன்றியதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. இதை வந்தவர் எடுத்தாண்டனர்.

ஆயுள்

இது ஆயுசு என்ற வடசொல்லின் சிதை வென்று சொல்லி ஏமாற்றி வருகின்றனர் வடவர். அவ்வாறே ஏமாந்து கிடக்கின்றனர் தமிழர்.

ஆயுள் என்பது ஆவுள் என்பதன் மரூஉ ஆவுள் – உள் என்னும் தொழிற்பெயர் இறுதி நிலை பெற்ற ஆதல் என்னும் பொருட்டாய தொழிற்பெயரேயாகும். இதை வந்தவர் எடுத் தாண்டனர்.

வாழ்நாள் ஆய்க்கொண்டே - கழிந்து கொண்டே போவது என்ற காரணம்பற்றி வந்தது ஆயுள் என்பது.

எனவே ஆயுள் தூய தமிழ்க்காரணப் பெயரென்றுணர்க.

பசு

இதையும் வடசொல் என்றே நம்பி வரு கின்றனர் படித்த தமிழரும். பசைதல் என்ற சொல்லுக்கு அன்புறுதல், ஒட்டுதல், பொரு ளூட்டமுடைமை என்பனவெல்லாம் பொருள். பால் என்ற பொருளூட்டமுடையது பசு. பசை பண்புப்பெயர் - அதன் முதனிலையாகிய பசு என்பதில் இறுதிநிலை இ புணர்ந்து கெட்ட தென்க.

பசுவென்ற தமிழ்க்காரணப் பெயரை வந்த வர் எடுத்தாண்டனர். தட்டிக் கேட்க ஆளில் லாதபோது தம்பி! தடபுடல் செல்லுமன்றே.

செஞ்சாமந்தியும் தும்பைச் செடியும்!

செஞ்சா மந்தியும் தும்பைச் செடியும்
கொஞ்சிப் பேசிக் கொண் டிருந்தன.
செடியில் நிறைந்த செம்மலர். இளையோன்
புதுவகைச் சட்டை போலி ருந்தது.
தும்பையும் பூவும் தோகையும் சிரிப்பும்!
உள்ளம் இரண்டும் ஒன்றே யாகி
இருப்ப தென்ற இவர்களின் முடிவை
யார்தாம் எதிர்க்க எண்ணுவர்? காற்றோ
இலவம் பழுப்பை எடுத்து வந்து
கலகம் செய்யும் கருத்தால் அந்தச்
செஞ்சா மந்தியின் தலையிற் சேர்த்தது
தும்பை கேலியாய்ச் சிரித்தது!
செம்மலர் சினத்தால் மேலும் சிவந்ததே.

வெண்பா வினா விடை

வினா: முதலிரண்டு அடிகள். விடை: ஈற்றிரண்டிகள்.

வினா: இராங்கியம்-எழில்வழுதி, சேலம் 2. விடை: முத்து

எண்ணம் இணைத்தே எழிற்கவிதை நல்குங்கால்
கண்களை ஏக்கம் கவருவதேன்? - கண்ணயர்ந்தே
தூங்கும் நிலவரமற் றேதோ துயரெண்ணி
ஏங்கும் நிலவரவென் றெண்.

வினா: ச. தனம், மலாயா. விடை: முத்து

சாதி பொழியச் சழக்கர்சதி தூளாக
ஓதுகலை ஓங்கவழி ஓதுகவே! - மேதினியில்
வள்ளுவன் தந்தபெரும் வண்மறையே நன்மறையாய்க்
கொள்ளல்யாம் கூறும் வழி.

வினா: இ. கிருட்டினன், புதுவை. விடை: முத்து

பாரதிநற் பாவலரா? பாரதிரப் பாடுகின்ற
பாரதிதா சர்பெரிய பாவலரா? - பாரதியார்
வெள்ளையரைச் சுட்ட வெடிகுண்டு; தாசனார்
தெள்ளு தமிழ்மலரின் தேன்.

வினா: கா. குருசாமி, அழகாபுரி. விடை: சித்தன்

வான்சிறப்பைச் சொன்னதிரு வள்ளுவர்த மிழ்மறையில்
ஏன்ஞாயிற் றின்சீர் இயம்பவிலை? - வான்சிறப்பைச்
சொன்னால் அதனுள் சுடர்ப்பரிதி யின்பெருமை
தன்னால் அடங்குமெனத் தான்!

வினா: வி. பொ. பழனிவேலன் B. O. L., அரண்தாங்கி. விடை: சித்தன்

அந்தணர் என்னுஞ்சொல் ஆரியரைத் தான்குறிக்க
வந்ததென்று கூறும் வகையாது? - விந்தைமிகும்
அந்தணர்என் பாரேஇங் காரியர்என் பார்கூற்றுப்
புந்தியிலாச் செய்கை புரி!

வினா: முத்து பத்மனாபன், சென்னை. விடை: சித்தன்

'இலக்கியம்' என்னும்சொல் இந்தியின் சேயா?
துலக்குக அண்ணா துணிந்து - கலக்கமறப்
பாவேந்தர் ஆய்ந்து பகர்செந் தமிழ்ச்செல்வம்
காவேந்து மென்குயிலிற் காண்!

ஆழியின் அறவுரை

காரைக்கால், கோ. பாரதி

வஞ்சித் தோப்பில் வளர்ந்த தருக்கள்
மஞ்சள் வெயிலால் மாநிறங் காட்டும்!
பாட்டையைக் கடந்து பரந்(து) உயர்ந்த
நாட்டம் ஈர்க்கும் நன்மண் மேட்டில்
வாட்டம் போக்க வந்துநான் அமர்ந்தேன்
ஈட்டும் பொருளை இமிழ்கடல் ஓடியும்
ஈட்டுக என்றே எம்மனோர் பாடிய
பாட்டை உணர்ந்து பார்த்தேன் ஆழியைச்,
சிந்தை நொந்தேன், சுதந்திரம் இழந்தோன்
வெந்த உளத்தோன் விளம்பும் உரைபோல்
சிந்தை கவரும் சீதள அலைகள்
வந்து தரையில் வடித்தது கண்ணீர்
கண்ணீர் வடிக்கக் காரணம் என்ன
முன்னீ ரேநீ மொழிவாய் என்றேன்
என்னுரை கேட்டே இழிநகை பூத்துத்
தன்னுரை புகலத் தொடங்கக் கேட்டேன்
உள்ளம் உடைந்தே உவகையை நாடிக்
கள்ள(ம்) இல்லாக் கடலெனைத் தேடி
வந்தாய் நானும் வரவேற் கின்றேன்
என்றன் உள்ளத் தின்னலை போக்கச்
செந்தமிழ் நாட்டில் சிறந்தோர் இலையோ?
சந்தக் கவிகள் சான்றோர் பாட
வாரி வழங்கி வான்புகழ் கொண்ட
பாரி போன்ற பைந்தமிழ் மன்னர்
மாரி பொய்ப்பினும் மனந்தள ராமல்
ஏரி வெட்டி இன்னல் களைந்தார்
முத்தும் பவளமும் மூழ்கி எனதுள்
சத்துள பொருள்கள் சால்புற எடுத்தார்
மெத்தக் கலங்கள் மேலை நாட்டை
முத்தம் இட்டு முழக்கின புகழை
செத்ததோ இன்றே அப்புகழ்
வித்தகத் தமிழன் சொத்தையா னனே!

ƒƒ

எழுதுவார்க்கு....

குயிலுக்குக் கட்டுரையோ கவிதையோ எழுதுகின்றவர் அத்துடன் தன் முழு முகவரி எழுதுவதோடு – குயிலுக்குரியதம் சந்தா எண் அல்லது குயில் விற்பனையாளரிடமிருந்து, குயில் வாங்குவதைக் காட்டும் நற்சான்று குறித்து அனுப்பக் கோருகின்றோம்

அப்படி இல்லாத செய்திகள் கண்டிப்பாய் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

தமிழ்ப்பணி ஆற்றுவாம்

வித்துவான், பா. முத்து, புதுவை.

பண்டு தோன்றிய பான்மைய தாகியே
கண்டு நேரெனக் கற்றவர் போற்றிடும்
மண்டு சீர்த்தமிழ் மாப்புகழ் ஓங்கிடத்
தொண்டு செய்தலே தூய்நெறி ஆகுமாம்!

ஏதி லார்நமை என்சொன போதிலும்
நீதி லாதநல் தெள்நெறி கூறிடும்
ஓத ரும்மொழி ஒண்தமி ழாமதைப்
பாது காத்தலே பண்பெனக் கொள்ளுவாம்!

விள்ள ரும்குறள் விண்புகழ் கண்டதும்
கொள்ள ரும்பல நூல்களைக் கொண்டதும்
உள்ள உள்ளநல் இன்பமே ஈவதும்
தெள்ள ருந்தமிழ்த் தீம்பொழில் அல்லவோ?

விண்ணு லாம்பெரும் வெங்கதிர் போலவும்
தண்ணு லாம்பெரும் திங்களைப் போலவும்
பண்ணு லாம்தமிழ், பாரிடை ஓங்கவே
மண்ணு லாம்தமிழ் மக்களை ஊக்குவாம்!

தேட ரும்மொழி தீந்தமி ழாமது
நாடெ லாம்பெரும் நற்புகழ் பெற்றிட
ஏடெ லாமதன் இன்மணம் வீசிட
ஈடில் நற்பணி யாவுமி யற்றுவாம்!

பண்ணி ருந்தமிழ்ப் பண்புண ராதவர்
கண்ணி ருந்துமி லாதவர் ஆவராம்
நண்ணு வார்க்குநல் லின்பமே நல்கிடும்
வண்ண நற்றமிழ்ச் செல்வியை வாழ்த்துவாம்!

வேற்று மக்களும் வேண்டும்அ ருந்தமிழ்
ஊற்றின் இன்சுவை ஓதலும் வேண்டுமோ?
மாற்றி லாதபொன் னுமிதை மண்ணிடைப்
போற்றும் செந்தமிழ் மக்களைப் போற்றுவாம்!

மீட்சிப் பத்து

(கட்டளைக் கலித்துறை)

பொன்னிலும் மண்ணிலும் பெண்ணிலும் நெஞ்சைப் புகுத்தலல்லால்
தன்னல நீக்கிப் பெரியார் நெறிநின்று தாய்நிலத்தை
முன்னுற மீட்டுத் தமிழ்,கலை, வாழ்க்கை முறைதழைக்கத்
தன்மானம் காக்கவேண் டாமோ அருமைத் தமிழர்களே ?

பாம்பாகச் சீறும் வடவரின் பல்லை உடைத்தலின்றி
மேம்பாடு கோரி வெறும்பாடு பட்டுக் கிடப்பதுண்டோ ?
நாம்பாடு பட்டதெல் லாம்விழ லோ? தமிழ் நாட்டுரிமை
வேம்பா? அடிமைநிலை கரும்பா? தமிழ் மேன்மக்களே !

உணலுற்ற சோறும் பறித்தான் ! தமிழின் உயர்வழித்தான்!
மணலுற்ற தென்றூண் தமிழகம் ! செந்தமிழ் மாணவரே
தணலற்ற வீட்டுக்குள் தைப்பொங்கல் பாடும் தலைவருண்டா?
நுணலாநாம்? தேவாங்கா? ஆமையா சற்றே நுவலுவிரே !

ஊர்ப்படம் நீக்கிப்பன் னூட்டுப் படத்தின் உருளரிக்கும்
தீர்ப்படங் கற்கும் இணக்கம் தராமல் திரைப்படத்திற்
பேர்ப்படங் காட்டிடும் பெண்ணுன பத்தரை மாற்றுத்தங்க
வார்ப்படங் கண்டால் மலைப்படங் கான்ஓர் கலப்படமே!

யார்தாம் தலைவர்? நல்வழி காட்டுவோர் யாவர்?இந்நாள்
யார்தாம் தமிழரைக் காக்கப் பிறந்தார்? இனிப்பிறவார்
யார்தாம்? அவர்நம் பெரியார்தாம் இல்லை எனில்பிறகு
யார்தாம் புகலுவிர் யார்தாம் புகலுவிர் இந்நிலத்தே!

(அடுத்த இதழில் முடியும்)

அழகு

≡ பட்டுக்கோட்டை இராசேந்திரன் ≡

கார்கண்டு மிகம கிழ்ந்து
களித்தாடும் மயிலின் ஆட்டம்
பார்கண்டு வியக்க வந்த
பகைவென்று வருவோன் வாகைத்
தார்கொண்ட மார்பு; தங்கத்
தட்டெனும் பரிதி - பெண்டிர்
நேர்கெண்டை விழிகள் எங்கும்
நிற்கின்ற அழகே வாழி !

மழலைச்சொல் சிறுவர் கூட்டம்
மகிழ்ந்தாடும் ஆட்டம், தீய
பழங்கதை வேண்டாம் என்னும்
படித்தவர் பேசல், இன்பம்
வழங்குதென் பாங்குப் பாட்டு;
வஞ்சியர் பின்னல் - எங்கும்
அழகெனும் உன்னைத் தானே
அடிக்கடி காணு கின்றேன் !

நிலவெனும் மங்கை வானில்
நீந்திடும் நிலையும், தென்றல்
உலவிடும் மலர்க்கூட் டத்தின்
உளங்கவர் அசைவும், தோப்பில்
பலப்பல வகையில் பாடும்
பளிங்குக்கண் குயிலின் பாட்டும்;
கலைஞனின் கைச்ச ரக்கும்
கழறொணா அழகே காட்டும்!

சிறுவர்கள் பள்ளி நோக்கிச்
சிட்டெனப் பறத்தல், நாரால்
நறுமலர் புனையும் பெண்டிர்
நகவிரல் ஓட்டம்; தன்னில்
பிறிதில்லை தெய்வம் என்னும்
பேறறி வாளன் சொற்கள்;
குறுகுறு நடைந டக்கும்
குழவிகள் - அழகின் தேக்கம்!

அழகு சிரித்ததடா!

தமிழன்பன், அண்ணாமலைநகர்.

வாடிக் கிடந்திட்ட காடு தழைத்து
வானுறு காட்சியதாய் - ஈடிலா
வானுறு காட்சியதாய்!
கூடிப் பறவைகள் வானப் பரப்பினில்
கொட்டிய தின்பவொலி - எங்கணும்
கொட்டிய தின்ப வொலி!

தேனை மணந்தின்பம் வாரி வழங்கிடுந்
தென்றல் உலவுதடா - தீந்தமிழ்த்
தென்றல் உலவுதடா!
வானப் பரப்பினில் ஓவியம் பற்பல
வண்ணமாய்க் காணுதடா - கண்கவர்
வண்ணமாய்க் காணுதடா!

பட்டுப் பசும்புலாம் மெத்தை மிசையினில்
பள்ளியே கொண்டதடா - மென்பனி
பள்ளியே கொண்டதடா!
மட்டினைப் பூவினில் ஏந்திப் புதுமையை
மாண்புடன் கூடிவிட்டாள் - மணமகள்
மாண்புடன் கூடிவிட்டாள்!

பார்க்கு மிடமெலாம் இன்பமே பூத்திடப்
பாய்ந்தது நெஞ்சினிலே - தேன்கவி
பாய்ந்தது நெஞ்சினிலே!
ஆர்க்கும் மகிழ்வினில் தன்னை மறந்திங்கே
அழகு சிரித்ததடா - அன்பா!
அழகு சிரித்ததடா!

மகிழ்வுச் செய்தி!

நம் கழகப் பற்றுள்ளார் ஒலக்காசி இராம. தமிழ்ச்செல்வன் அவர்களின் துணைவி சகதீசுவரி அம்மையார் - 8-3-59 ஞாயிறு இரவு, ஒரு ஆண்மகவை ஈன்றெடுத்தார். அதன் நினைவாகக் குயில் வளர்ச்சிக்கென இரண்டு ரூபாய் அனுப்பியுள்ளார். பெற்றுக் கொண்டோம். நன்றி.

தாய்க்கும் சேய்க்கும் எங்கள் நல் வாழ்த்துக்கள்.

— அமைச்சர்.

புரட்சிப் புயல் வீசட்டும்

சோழபுரம், கோ. நாகராசன்.

பாராண்ட தமிழன் பதுங்கி வாழ்கிறான்; ஆடு மாடுகளை மேய்த்துவந்தவன் அதிகாரம் செய்கிறான். கங்கை கொண்டவன் பங்கப்படுகிறான்; எங்கோ கிடந்தவன் எக்காளம் போடுகிறான்; கடல் கடந்தவன் இடர்படுகிறான்; காட்டிக்கொடுத்தவன் களிக்கிறான். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற தமிழனுக்கா இந்த சிறுமை, "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய"வனுக்கா இந்த வறுமை. "தனக்கென முயலா நோன்றான் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என இயம்பிய இளம் வழுதியின் தன்னலமற்ற தமிழ் மகனுக்கா இந்தச் சிறுமை?

"ஏ! தாழ்ந்த தமிழகமே! ஏனிந்த ஏற்றத்தாழ்வுகள்? நீ ஈன்றெடுத்த இளவல்களுக்கு இதுதான் நீ தரும் பரிசா? உனக்குத் தன்மானம் என்பதே கிடையாதா? கொதித்தெழுந்த கோமான்களை மறந்து விட்டாயா? போர் என்றதும் வீறுகொண்டெழுந்த வீரர்களை இழந்து விட்டாயா? "மானம் ஏற்றால் போதும் மாற்றான் தோற்றால் போதும்" என்ற தன் கணவன்முதல் பச்சைப் பாலகன்வரை போரிலே பரிகொடுத்து வாகை சூடிய வீரத்தாயை மறந்து விட்டாயா? ஆற்றைக்கெடுக்கும் நாணலைப் போல் இந்த நாட்டைக் கெடுத்துவரும் பூணூலை இன்னும் எவ்வளவு காலம் வாழச்செய்வாய்? இது உனக்கு நீதியா? நேர்மையா? ஞாயந்தானா?" என்று தமிழகத்தை நொந்து கொள்வதைத் தவிர வேறென்ன நாம்செய்யமுடியும் என்று எண்ணும் எனதருமைத் தோழர்களுக்குக் கூறுகிறேன். அவர்கள் இனயெழுச்சிபெற வேண்டும்; நான் தமிழன்; என்மொழி தமிழ்; என்நாடு தமிழ்நாடு; பேசுவது தமிழ்; கேட்பது தமிழ்; பார்ப்பது தமிழ் என்று எங்கும் தமிழ் முழங்கவேண்டும். இவ்வெழுச்சி இத்துடன் நில்லாமல் போராட்டமாகிப் புரட்சியாக உருப்பெற வேண்டும்; கொதித்தெழும் காட்சி கோட்டைகளின் வேட்டைகளைக் கண்டு ஆட்டம் கொள்ளாமல் காட்டமாகப் புரட்சியை நடத்தியே தீர வேண்டும்.

மலர் வனத்திலே, மணிமேகலையைக் கண்ட அரசகுமாரன் (உதயகுமரன்) "மானே, மயிலே" என்று ஆசைமொழி கூறி, நேச கரம் காட்டி, பாசத்தோடு அவளை நெருங்குகிறான்; அவ்வமயம் அவள் தோழி சுதமதி அரசகுமாரனை நோக்கிக் கூறுகிறாள்.

"வினையில் வந்தது; வினை வாயது;
புனைவது நீங்கிற் புத்திடு வது
மூப்பு விளிஉடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றியல் குற்றம் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென ஓர்ந்து"

-மணிமேகலை

"மானே என்றீரே அங்கே என்ன இருக்கிறது? தோல்; தோலைப் பிய்த்தால் நார்; நாரைப் பிய்த்தால் நரம்பு; நரம்பைப் பிய்த்தால் இரத்தம், சீழ் இவற்றிலா காமரசம் பருக வந்தீர்கள்? என்று அவனுடைய காம வேட்கையை அடக்க; ஆசை அலைமோதிக் கொண்டிருந்த பெண் ஆசையைக் குறைக்கச் சுதமதி கூறுகிறாள்.

அதுபோல நம்மிடையே சுடர்விட்டு எரிந்த சுதந்திர தாகத்தை; புரட்சிவேட்கையை பார்ப்பனர்கள், கடவுளின் பெயரால்; காம லீலைகள் நடத்தும் கயவர்களின்பெயரால் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி, பக்திப் பாடல்கள் என்றும்; முக்தி மார்க்கமென்றும் மூட நம்பிக்கைகளை நம்மிடையே முனுமுனுத்து அவ்வப்போதே நம்மை அடக்கிவிட்டனர்.

மேல்நாடுகளிலே கலையிலே புரட்சி; மதத்திலே புரட்சி; தொழிலிலே புரட்சி; சமுதாயத்திலே புரட்சி; எங்கும் புரட்சி எங்குப் பார்த்தாலும் புரட்சிமயமாகவே காட்சி அளித்திருக்கிறது. இன்று தனித்தியங்கும் நாடுகள் எல்லாம்புரட்சியின் அடிப்படையிலே தோன்றினவைகளேயன்றிவேறென்ன? அமெரிக்கா இங்கிலாந்தினின்றும் தனித்தியங்க எண்ணியது சுதந்திரப்போர் நடத்திற்று. சுய ஆட்சி ஏற்றது. இன்று செல்வம் செழித்து; சிந்தை குளிர்ந்து மகிழ்கிறது; பிரான்ஸிலே பாஸ்டில் சிறையைத் தகர்த்துத் தரை மட்டமாக்கி; சீமான்களையும்; சிறுமதி படைத்தோரையும்; பூமான்களையும் கல்லுளி மாக்களையும் காட்டிக் கொடுக்கும் கல் நெஞ்சர்களையும் கிளட்டின்" என்ற கொடு வாளினால் வெட்டிச் சாய்த்தனர். வெற்றி கண்டனர்: ரஷ்யாவிலே மன்னர் முதல் மடாதிபதிகள் வரை மக்கள் நல்வாழ்வுக்குக் குறுக்கே நின்றவர்களை எல்லாம் குப்புறக் கவிழ்த்துச் சமத்துவத்தை நிலை நாட்டிய புரட்சிவீரர்களைப் பாருங்கள் அதற்காக அவர்கள் அடைந்த இன்னல்கள் கடந்த

மறந்தனையோ?

தஞ்சை, எழிலன்

ஆரியம் புகுந்த தாலோ?
அடிமையே மலிந்த தாலோ?
ஆரிய தாசர் எல்லாம்
அறவழி மறந்த தாலோ?
காரிய வாதி யான
கனங்களின் சிறுமை யாலோ?
சீரிய தமிழ்ப்பண் பாடா
திருப்பதேன்? தும்பி யேநீ.

அன்னையாம் தமிழ்ம றந்தே
ஆரியப் பரத்தை இந்தி
'சென்னை'யாம் தமிழ ரில்லில்
சேர்வதால் மலைக்கின் றாயோ?
வன்சொலாம் 'ஆகாஷ் வாணி'
வதிவதால் கவலை கொண்டோ
இன்னிசைத் தும்பி யேசொல்
இந்நாள்ஏன் மௌன மானாய்?

பிறப்பொக்கும் உலகில் எல்லா
உயிர்க்குமென் றோது பண்பும்
இறப்பது கண்டோ? மண்ணில்
எண்ணிலாக் கொடுமை கண்டோ?
பிறப்பிலே பறையர் பள்ளர்
பிரித்திடில் சாதி கோடித்
திறம்படல் கண்டோ? நீயுன்
தேனிசை மறந்திட் டாயோ?

காட்டினை அழித்து நல்ல
கட்டிடந் தனைச மைத்து
நாட்டினை வளர்த்தே இன்ப
நகரெலாம் அமைக்கப் பட்ட
பாட்டினுக் குரியோன் அள்ளிப்
பருகநீர் உணவு மின்றி
ஓட்டாண்டி யான தாலோ?
உன்மனம் நொந்த தாலோ?

அந்தநாள் பெருமை பேசி
அழிவுறும் தமிழன் இன்று
சொந்தமா யிருந்த நாட்டைச்
சரண்டிவிட் டிருப்ப தாலோ?
அந்திநாள் நெருங்கக் கத்தி
அறுத்திடக் கழுத்தைக் காட்டும்
மந்தபுத் தியாலோ? சூடு
மருந்துக்கு மிலாத தாலோ?

வண்டின மொன்றாய்ச் சேர்ந்து
வசைமொழி பொழியா தோ?உன்
பண்ணொலிக் காக மக்கள்
பறந்திடல் காண்கி லாயோ?
எண்ணிலா மக்கள் மன்றில்
எம்"அரங் கரத்தி னம்"போல்
உண்ணுதல் விட்டொ ழித்தே
உன்இசை மறந்திட் டாயோ?

கட்டாறுகள்; நீந்திவந்த நீரோடைகள்; ஏராளம் ஏராளம் அதற்காக அவர்கள் கலங்கினார்கள் இல்லையே.

சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் போல் (தீயின் கண் ஓடும் பொன்னுக்கு அது சுடச் சுட தன்னோடு கலந்த மாசு நீங்கி ஒளிவீசுமாறு போல்) அக்கிரமங்களும் அநீதிகளும் நிறைந்த வாழ்க்கையை புரட்சித் தீ என்னும் தணல் சுட்டுக் கொண்டே இருந்தால் அக்கிரமமும் அநீதி கலந்த, மாசு நீக்கி நேர்மையான வாழ்வின் ஒளிவீசும் இன்பம் பிறக்கும்.

இவ்வளவு நாளுமில்லாமல் இன்று ஓர் விழிப்பு ஓர் உணர்ச்சி இப்போது ஏற்பட்டிருக்கிறது என்று எண்ணலாம் சிலர். மன்னர் ஆட்சியிலோ அல்லது சர்வாதிகாரிகளின் ஆட்சியிலோ, எழுத்துரிமையோ பேச்சுரிமையே அளிக்கப்படவில்லை இன்று உள்ளதைப்போல் அவ்வுரிமை பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலேதான் ஒளிவிட ஆரம்பித்தது அரசியலின் அட்டூழியங்களை எடுத்துரைக்க அனுமதிக்கப்பட்டார்கள் மக்கள்.

மங்காத புகழிலும், மறையாத பெருமையிலும், வாழ்விலும் தாழ்விலும், கவனம் செலுத்தி நாம் வாழ்கின்ற நாட்களிலே நல்லதொரு ஆட்சியை தமிழகத்திலே நிறுவி நலம் காணவேண்டும்.

"உடலை நொறுக்கி அடக்கினால் – நெஞ்சில்
ஓங்கும் பேர்ஆர்வம் ஏங்குமோ?
கடலின் கொதிப்பைக் குறுந்தடி – வீச்சில்
கட்டுப்படுத்த முடியுமோ?"

நம்மிடையே சுடர்விட்டு சோதிமயமாய் நிமிர்ந்துநிற்கும் புரட்சித்தீயை அணைக்க ஆண்டவன் என்று ஒருவன் இருந்துவந்தாலும் முடியாதே. காதல் அறமெல்லாம் களித்திருந்த தமிழகம் பேதைமையும் ஏழ்மையும் பிழைத்திருக்க விடாதீர்கள். கச்சைகட்டி மார்தட்டுங்கள் துச்சமென அச்சம் அகற்றி துணிவுடனே புறப்படுங்கள் புரட்சிமுனை நோக்கி. நம் வாழ்க்கையிலே-சமத்துவம் மனத்திலே உயர்ந்த நோக்கமுடைய நாம் "சாதியிரண்டொழிய வேறில்லை" என்று சாற்றுவோம். நீதிவழுவா நெறிமுறையைப் போற்றுவோம் பாதியில் பிரிந்த பதவிப் பித்தர்களைத் தூற்றுவோம். எங்கே தந்தையின் வீரம்? எங்கே அவரிடம் கற்றபாடம்? புரட்சிப்புயல் வீசட்டும். சிறுமதி படைத்தோரை செந்தணலில் தள்ளுங்கள் புரட்சித்தீயைமூட்டுங்கள் புவியெங்கும் புகழ் நாட்டுங்கள்! ★

தமிழும் பார்ப்பனரும்

புலவர் பழநிவேலன் பி. ஓ எல். அரண்தாங்கி.

தமிழ் நாட்டில் ஆரியர் புகுந்து தமிழைக் கற்றுத் தமிழுக்குத் தொண்டு புரிந்தார்களா? தமிழைக்கொண்டு பிழைத்தார்களா? தமிழுக்குத் தீங்கு இழைத்தார்களா? நன்மைசெய்தார்களா? என்பனபோன்ற கடாக்கள் கிளம்பலாம். வாழ வழியின்றி வந்தவர்கள், தமிழ் கற்காவிட்டால், தமிழ் பேசாவிட்டால், தமிழர் ஆதரவு ஏன்? தமிழரசர்கள் ஆதரவு, அவர்கட்கு எவ்வாறு கிட்டியிருக்கமுடியும்? தங்கள் மொழியை எப்படித் தமிழர்களிடையே புகுத்தமுடியும்? தங்கள் நாகரிகம், வாழ்க்கைமுறை, கொள்கைகளைத் தமிழர்களிடையே பரப்பமுடியுமா? மொழிப்பற்று மிகுதியுமுடைய தமிழர்களை ஏய்த்து அவர்கள்பால் தம் கோட்பாடு, குலவொழுக்கம், பழக்கவழக்கங்களைப் புகுத்தமுடியுமா? தமிழில் உயர்ந்த சான்றோரைக் குறிக்கும் "ஐயர்" என்ற சொல்லையும் "அந்தணர்" என்ற சொல்லையும் தங்களைக் குறிப்பனவாக்கிக் கொண்டு தமிழர்மீது ஏறிச் சவாரி செய்யமுடியுமா? தமிழ் நூல்களில் இடையிடையே தங்கள் கொள்கைகளையும், பண்பாட்டையும் புகுத்தித் தமிழர்கள் அவை தங்களுடையன வென்று நம்பச் செய்ய முடியுமா? வடமொழிதான் தமிழுக்கு ஆக்கமளித்தது ஊக்கமும் ஊட்டியது என்று இப்போது சில தற்குறிகள் கூறுகிற—எழுதுகிற அளவுக்கு வாய்ப்புக்களையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொள்ளமுடியுமா? எனவேதான் ஆரியர் தமிழகத்தில் அடியெடுத்து வைத்ததும் தமிழ்கற்பதில் முனைந்து தமிழ் நூல்கட்கு உரையும் எழுதத் தொடங்கினர்.

தங்கள் செல்வாக்குத் தமிழகத்தில் நிலைப்பதற்கு வாய்ப்பு அளித்தது. ஆரியர் தமிழ்கற்றமை; தமிழுக்கு வாழ்வளிப்பது வாழ்வை அழித்ததுதான்.

ஆரியர்க்கு அடிதாங்கிகளாயிருக்கும் தமிழர் சிலருக்கு என் மீது சினம் எழுலாம். திராவிடர் முன்னேற்றக் கழகமாக இருந்துகொண்டு தங்கள் கட்சிக்கு ஆள் சேர்க்கவும், தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கு, ஆகவும் தம் கொள்கைகளைக் காற்றில் பறக்கவிட்டுப் பார்ப்பனர்களையும் தம் கட்சியில் சேர்த்துக்கொண்டு, அவர்களும் (ஆரியர்) நம் நாட்டில் பிறந்தவர்கள்தானே; தமிழ்தானே பேசுகிறார்கள்; அவர்களை நாட்டைவிட்டுப்போ என்று கூறலாமா? என்று முதலைக்கண்ணீர் வடித்து எங்கள் கட்சி "திராவிடர் முன்னேற்றக் கழகம்" அல்ல; திராவிட முன்னேற்றக் கழகம் அதாவது திராவிட நாட்டை முன்னேற்றுகிற கழகம் என்று திரித்துக் கூறி ஆரியர்கள் ஆயிரக்கணக்கானவர்களை உறுப்பினர்களாக்கி திரு, வி. பி. இராமன் அவர்களைச் செயலாளராகவும் கொண்டுள்ள ஆரியர் முன்னேற்றக் கழக அன்பர்கட்குக் கூட, கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டை மீறி, என்பால் சீற்றம் தோன்றலாம்; இருப்பினும் உண்மையைத் தமிழ்மக்கள் உணரவேண்டும் என்று எண்ணியே இக் கட்டுரை வரைய முற்பட்டேன். எந்த இனத்தாரையும் இழிவு படுத்தவோ தாழ்த்திக் கூற வேண்டும் என்றோ அல்ல. தமிழர்களின் சிந்தனைக்கே விடுகின்றேன்.

ஆரியர்களின் தாய்மொழி (இனமொழி) சம்ஃச்கிருதம் என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அவர்களைக் கேட்டால் "தமிழ்" என்றுதான் கூறுகிறார்கள் - கூறுவார்கள். அது வேறு செய்தி. ஆனால் அவர்கள் தமிழுக்குச் செய்த, செய்துவருகின்ற பணிகளைப் பாருங்கள்.

தமிழ் நாட்டில் ஈராயிரம் ஆண்டுகளாக வந்து குடியேறி தமிழ்ப்புலமை யெய்தி தங்கள் குலவொழுக்கத்தை யொட்டிச் 'சாதி'ப்பிரிவு வைத்துக் கொள்ளாது தமிழர்கள் தங்களை மதிக்க வேண்டும் பெருமைப்படுத்த வேண்டும் என்று கருதித் தங்களை 'ஐயர்' என்றும் 'அந்தணர்' என்றும் அழைத்துக் கொண்டார்கள். அவ்வாறே நூல்களிலும் எழுதி விட்டனர். தமிழர் தமக்கு இயல்பான நம்பும் தன்மையால் உண்மை என்று ஏற்றுக்கொண்டனர்.

ஆனால் வள்ளுவர் ஏற்கவில்லை. "அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ் வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்" என்று அந்தணர் என்ற சொல்லுக்குப் பொருளும் விளக்கமும் வெளியிட்டார் பலதமிழர் இன்றுபோல் அன்றும் இருந்தனர். இப்போது தமிழர்பலர், தமிழ்கூடக்கற்காமல் தடுமாறி நிற்கும்போது "இந்தி" என்ற இலக்கிய இலக்கணமில்லாத மொழியைத் தென்னாட்டில் பரப்ப முன்வந்து "தென்னிந்திய இந்தி பிரச்சார சபா"வுக்குத் தலைவராகி வடநாட்டார் கங்காணியாக இருக்கும் உயர்திரு, வேதரத்தினம் அவர்களைத் தமிழுலகம் நன்கறியும், இப்படிப்பட்டதமிழர் அன்றும் இருந்தனர். ஆரிய மொழியை வரவேற்ற தமிழர், கடவுளுக்கு இரண்டு கண்கள் தமிழும்

வடமொழியும் என்று கூறினர். இப்போது வந்துள்ள 'இந்தி' நெற்றிக்கண் போலும். மற்றமொழிகள் கடவுளுக்கு என்ன உறுப்புக்களோ? உலகப் பொது மொழியாகிய 'ஆங்கிலம்' கடவுளுக்குப் பிடிக்காதோ என்னவோ! ஆனால் 'சிவன்' என்ற கடவுள் ஆங்கிலேயர்கட்குச் சொந்தமில்லையென நினைக்கிறேன்.

தமிழ்நாட்டிற்குப் போந்து—தமிழ் கற்ற பார்ப்பனர் தமிழ் நூல்களுக்கு உரை வகுக்க முற்பட்டனர். அங்ஙனம் உரை எழுதுங்கால் தங்கள் மொழியாகிய சம்ஃச்கிருத்தில் உள்ள நூற்கருத்துக்களையும்; தங்கள் மதக் கோட்பாடுகளையும் குலவொழுக்கத்தையும் இடம் கிடைக்கும்போது நுழைத்து விட்டனர். தமிழர்கள் அவை தங்களுடையனவே என்று கருதுமாறு திரித்துவிட்டனர். உதாரணமாக நச்சினார்க்கினியர் பரிமேலழகர் இவர்களை எடுத்துக்கொள்ளுங்களேன். நச்சினார்க்கினியர் செய்த நச்சு வேலைபற்றி முன்னர் குயிலில் செய்தி வந்துள்ளது. பரிமேலழகர் திருக்குறளுக்குஉரை எழுதியுள்ளார். இன்று சிறந்தஉரையென்று பாராட்டப்பெறுவது அதுதான் என்றாலும் அமிழ்திலும் சிறிது நஞ்சு கலக்காமல்இல்லை. வடமொழியும், தென்மொழியும் கற்றவராதலின் வடமொழிச் சொற்களையும் கருத்துக்களையும் கையாண்டுள்ளார் என்பது யாவருமறிவர்.

உரைப்பாயிரத்திலேயே, "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலும்' ஆம்" என்றும் ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரியம் முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற்கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல் என்றும் தமிழில் இல்லாத வடமொழி நூலையும் 'வருணம்' என்ற உயர்வு தாழ்வு கற்பிக்கும் வடசொல்லையும் எடுத்துக்கூறி தமிழ்ச் செய்யுளுக்கு உரை விளக்கம் எழுதப்புகுகின்றார்.

தென்னாட்டுச் சுடரொளி

கோனூர், தமிழ்நாவன்

எந்நாடும் காணாத என்னாட்டுச் சுடரொளி
தென்னாட்டில் பிறந்ததொரு பெருமை — ஒளி
திக்கெட்டும் பரவுதடா அருமை!

மண்ணோடு பிறந்தவன் மண்ணாங்கட்டிபோல
மாட்டோடே உழைக்கின்றான் தினமே — அவன்
மாண்பென்ன? சமுகத்தில் பிணமே!

இங்கிலை ஏனென்றே எண்ணியவர் தானுண்டா
இழிசாதி மக்களா உழைப்போர்! — அவர்
இருப்பதால் எண்ணிலார் பிழைப்போர்

கண்ணில்லை பார்த்திடவே காதில்லை கேட்டிடவே
கனமான மனிதருக் கிங்கே! — மக்கள்
கட்டறுத் தெழுந்திடுதல் எங்கே?

என்றுணர்ந் தெழுந்தவர் என்னினம் வாழ்கவே
என்றுளம் நினைந்திட்டு நின்றார் — அவர்
இளைஞர்துயில் எழுப்பிமுனம் சென்றார்!

குன்றெனவே நின்றுகட வுள்சமய சாதிகளை
கொன்றுவிட முன்னெழுந்து வந்தார் — தம்
கொள்கையினை மக்களிடை தந்தார்!

வென்றவுயர் தோள்கரங்கள் இன்றுவிலங் கேற்பதனை
கண்டுநகை கொண்டிடுவார் மாற்றார் இனி
கண்டிடுவோம் விடுதலைஎன் றார்த்தார்!

நின்றதுவே தந்தைபடை நெறித்ததுவே மூடமதை
நிலைத்ததுவே விடுதலைதான் இங்கே! — தமிழ்
நிலத்துயர ஊதுவெற்றிச் சங்கே!

தொடக்கமே இவ்வாறாயின் உள்ளுறை எவ்வாறிருக்குமென்பது கூறத்தேவையில்லை. சிறப்பாகக் கீழ்வரும் குறட்பாக்களுக்குப் பரிமேலழகியார் கூறியுள்ள உரையையும் விளக்கத்தையும் பார்த்தறியுங்கள்.

1. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
   பொறுத்தானோ டூர்ந்தா னிடை.
2. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
   பெய்யெனப் பெய்யு மழை.

3. அவிசொரிந் தாயிரம் வேட்டலின் [ஒன்றன்
உயிர்செகுத்(து) உண்ணாமை நன்று

செய்யுட்களுக்கு விளக்கங் கொடுக்கப் புகுங்கால் மேற்கோள்களும் நீதிகளும் வடமொழிச் சார்பு, ஆரியர் பண்பாட்டுச் சாயை உடையனவாய் உளவேயன்றித் தமிழ் மரபுக் கேற்ற விளக்கமேயில்லையெனலாம். வடசொற் களை மிகுதியும்கையாண்டுளர். இவரைப் போன்றுதான் முன்னரிருந்த ஆரிய உரையாசிரியர்கள் உரையெழுதிச் சென் றுள்ளார்கள். தமிழர்கள் உரையாசிரியர் களின் இனம், குலம், மரபு, அறியாமை யால் அவர்கள் எழுதியவற்றைத் தமி ழர்க்கு உரியனவென்று நம்பினர். இடம் கிடைக்கும்போது புராணக் கருத்துக் களையும் புகுத்திவிட்டனர்.

பிற்காலத்தில் தோன்றிய பார்ப் பனத் தமிழ்ப்புலவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்கருதித் தமிழைக் கற்றுக்கொண்டு வடமொழியாகிய தம் மொழியைத் தமிழில் சமமாகக் கலந்து பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டனர் அதைத்தான் "மணிப்பிரவாள நடை" என்றனர் தமிழ்நூலார்.

தமிழில் மொழிவரலாறு எழுதியும் தம்பெயரைத் தமிழில் பரிதிமாற்கலைஞன் என்று மாற்றிக்கொண்ட திரு, சூரிய நாராயண சாத்திரியார் அவர்கள் எழுதிய தமிழ் வரலாற்றில்கூட 'பாஷை' என்றுதான் குறிப்பிட்டுள்ளார். அது போன்றே மு. இராகவய்யங்கார்கள் சாமிநாதையர்வாள் முதலியோரும் எழுதியுள்ளனர். இவர்கள் தமிழ்ச்சொற் கள் தெரியாமல் எழுதியவர்களா? இல்லை. தமிழ் நன்கு கற்றுத்துறைபோய பெரும்புலவர்கள். தம்இனம் தம்மொழி வாழவேண்டிய வழிவகைகளை வகுப் பதற்காகவே தம் கருத்துக்களையும் மொழிச் சொற்களையும் தாராளமாக எடுத்தாண்டுள்ளனர். பெரும் பேரா சிரியர் சாமிநாதையர் எழுதியுள்ள நூல் களையோ, உரைகளையோ படிப்பவர் அவர் எவ்வளவு வடசொற்களைக்கலந்து எழுதியுள்ளார் என்பதை நன்கறிவர்.

(அடுத்த இதழில் முடியும்)

பெரியாரின் பேச்சு

பொய்யாமொழி. கருப்பட்டிப்பாளையம்.

அரைத்தெடுத்த சந்தனத்தின் நறுமணம்போல் சூழ்ந்தே
அயல்நாட்டான் தலைவணங்க உயர்வோடு வாழ்ந்தோம்;
உரைத்தெடுத்த செழும்பொன்னின் ஒளிமுகம்போல் தோன்றி
உயர்மானம் கற்போடு குன்றெனவே நின்றோம்;
நரிக்குணத்துச் சொறிநாயின் கீழான பார்ப்பான்
நந்தமிழர் சுகவாழ்வை வெறியோடு பார்த்தான்;
அரிக்கின்ற திருமார்பிற் பூணூலை மாட்டி
அழுக்கான மனத்தோடே வந்துவிட்டான் தெற்கே.

சாதிக்குள் சாதிபல தோற்றுவித்தான்; செத்த
சாத்திரத்துக் குப்பைகளைச் சேர்த்துவைத்தான்; புத்திச்
சூதுக்குத் தமிழ்மகனை ஆளாக்கிக் கொண்டான்
சுரணையின்றிச் சிலமடையர் அடிதொழுது நின்றார்,
சாதிக்குத் தலைவணங்கி முக்காடு போட்டுத்
தமிழ்தந்த வீரத்தைச் சாக்கடையில் இட்டார்
வீதியெங்கும் சாமிகளை நிற்கவைத்தே, சோற்று
வீணர்களை நாடெங்கும் பரப்பிவிட்டார் அந்தோ!

"பைவிரியும் நச்சரவம் போன்றவனே பார்ப்பான்;
பழகிடினும் அன்னவனைத் தீப்போல்ஒழு" கென்றே
மெய்யறிந்த 'திரிகடுக'ப் பாவேந்தர் சொன்ன
மேலான பொன்மொழியும் தீதாகிப் போமோ?
பைந்தமிழர் கைதொழுதுப் பணிவோடு, நச்சுப்
பார்ப்பானை ஐயரென்ற காலமுந்தான் போச்சே;
அய்யனையும் 'சாமி'யென்ற காலமென்ன ஆச்சாம்?
இத்துணையும் செய்ததடா பெரியாரின் பேச்சு!

சாகலாகாதோ?

புலவர்: தொல்காப்பியன்

சங்கமிருந்த செந்தமிழும் கண்ணீர்விட்டது – அது
சத்தமிட்(டு) அழுவதற்கும் சத்துக்கெட்டது
சிங்கமிருந்த குகையிலெலி வந்துநுழைந்ததே – ஐயோ
செந்தமிழர் வாழ்வினிலே இந்திபுகுந்தது.

வண்டமிழர் பேரெதிர்ப்பைக் கண்டிருந்துமே – அந்த
வடமொழியும் போவதாக இல்லைதங்கமே!
கண்கொடுத்த தமிழுக்கொரு வாழ்வுமில்லையோ? – நம்
காலத்திலே இல்லையெனில் மற்றும்எப்போதோ ?

"ஆகாச வாணி'யென ஐயோசொல்லுவார் – மிக
அழகுதமிழ் வானொலியைக் கொன்றுதள்ளுவார்
சாகாத உடலுமிங்(கு) இல்லையில்லையே – அட
சந்தமுள்ள தமிழ்மொழிக்குச் சாகலாகாதோ?

தீக்கிரையாக்குவோம்

சென்னை V. கோவிந்தராசன்

(கட்டபொம்மு இசை)

வாராதே வாராதே இந்திப் பெண்ணே – இங்கு
வந்து மடியாதே இந்திப் பெண்ணே !
பாராதே திராவிடர் தேசந்தன்னை – பின்பு
பாடையில் போகாதே இந்திப் பெண்ணே

முப்பத்தின் எட்டினில் இந்திப் பெண்ணே – வந்து
மூக்கறு பட்டாயே இந்திப் பெண்ணே!
தப்பிப் பிழைத்திட வேண்டு மெனில் – இந்தத்
தமிழகம் வாராதே இந்திப் பெண்ணே!

குல்லுக பட்டராம் "ஆச்சாரியார்" – உன்னைக்
கூட்டிக் கொணர்ந்தாரே இந்திப்பெண்ணே
"வெல்லுக" என்றாரே எம் "பெரியார்" – குழி
வெட்டிப் புதைத்தோமே அன்றே உன்னை !

எங்கள் குலமொழித்தீந்தமிழாம் – அன்னை
இகழ்ந்தவர் யாரையும் மாய்த்திடுவோம்.
எங்களின் தாயுறும் எக்குறைக்கும் – இனம்
இரத்தம் கொதித் தெழு(ம்) இந்திப் பெண்ணே!

தமிழன்னாய் !

கோனூர், மணிவேலன்

தமிழன்னாய் நீகலங்காதே! – ஈன்ற
தனயர்கள் யாமுள்ளோம்! சூழ்ச்சிவெல் லாதே!
இமிழ்கடல் போலெழுந் தாலும் – பகை
இனியெங்கள் வாளுக்கு நிச்சயம் மாளும்!

பெற்றவர் யாவரும் அந்தோ! – துரோகப்
பேயர்க ளோவென்று நீமிக நொந்தாய்!
உற்றஎன் தாயே! நீ கேளாய் பற்பலர்
உற்றனர் நினக்கிழி(வு) என்றிடின் தாளார்!

தோளுண்டு துணிவுண்டு நெஞ்சில் – கையில்
தூக்கிய வாளுண்டு பகையெங்கு மிஞ்சும்!
மாலுண்ட பித்தர்கள் தாமும் – தமிழ்
மண்ணுக் குழைத்திடும் நாள்வந்து சேரும்!

வடவர்தம் ஆட்சியி னாலே – உறும்
வாட்டங்கள் தீரும்நாள் எமக்குநன் னாளே!
திடமென நீநம்பு அன்னாய்! – இனி
திக்குணப் பார்ப்பனர் ஆகுவர் மண்ணாய்!

மறத் தமிழ்த் தாயே !

காரை, ப. நெடுமாறன்.

சிறையினுள் வாட்டி என்னைத்
　　தீயிலே வீழ்த்திட் டாலும்
குறைமதி படைத்தோர் மிக்க
　　கொடுமதி விளைத்திட் டாலும்
துறைதோறும் தோல்வி இன்னல்
　　தொடர்ந்தெனை அழித்திட் டாலும்
மறத்தமிழ்த் தாயே! நின்னை
　　வணங்குதல் மறக்கி லேனே !

பொன்னுடன் புகழும் கல்வி
　　பதவிகள் குவிந்திட் டாலும்
அன்புடை மனைவி மக்கள்
　　அருகிலே இருந்திட் டாலும்
அன்னையே நின்னை யல்லால்
　　அவனியில் பிறிதாம் ஒன்றை
என்னுளம் நினைப்ப தில்லை
　　என்றுமே உன்றன் ஏக்கம் !

வாழ்ந்துநீ உயர்ந்தால் என்றன்
　　வாழ்க்கையும் உயர்வ துண்மை!
வீழ்ந்துநீ மடிந்தால் என்றன்
　　வாழ்க்கைதான் உயர்வ தெங்கே?
ஆழ்ந்துநான் ஓர்ந்தேன் என்றன்
　　உடல்பொருள் ஆவி நீயே
சூழ்ந்துனைக் காப்பேன் அன்னாய் !
　　சொற்செயல் ஆவி ஈந்தே.!

தாயே !நின் பற்றி லாத
　　தமிழனும் மனிதன் தானோ ?
சேயெனப் பிறந்தும் உன்றன்
　　சிறப்பினை விரும்பான் என்றால்
ஆயிரம் நலன்கள் பெற்றே
　　அறிஞனாய் திகழ்ந்திட் டாலும்
நாயினும் கடைய னாவான்
　　நடைப்பிண மாக வாழ்வான் !

பார்ப்பாரை நத்தும் இழிந்தோர் – தம்
பண்பினை மாற்றில ராயின் ஒழிந்தார்!
போர்ப்பறை ஆர்ப்பது கேளாய்! – வட
புல்லரின் ஆட்சி நடுங்குதல் பாராய்!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

வள்ளுவரின் குறளும் ஆச்சாரியார் உரையும்

தகட்டூர், மா. இராமலிங்கம்.

மனத்திலும் பாவத்தை நினையா தொழிக: அதுபோதும்: தன்மஞ்செய்ய வேண்டாம் என்றவாறு ''

இது பரிதியாரின் வாக்கு.

'' ஒருவன் தனது நெஞ்சத்துக்கண் பாவக் கருத்து இலனாதலே அனைத்தறங்களும்: ஒழிந்தன எல்லாம் துக்கத் தன்மையுடைத்து என்றவாறு ''

இது காளிங்கர் காட்டும் கருத்து.

இவைகளோடு ஆச்சாரியார் கருத்தையும் ஒப்பிட்டு நோக்க அதில் ஏதும் முரண்பாடு இல்லை. ஆனால் நாம் சுட்டிக் காட்ட விரும்புவது பக்தி, பூஜை இவற்றின் இன்றியமையாமையை வற்புறுத்திக்கூறும் பகுதியே யாகும்.

'' மாசற்ற உள்ளத்தைப் பெறுவதற்காகவே பக்தியும் பூஜையும்'' இக்கருத்து ஆச்சாரியார் விட்டிருக்கும் சரடே தவிர வள்ளுவர் கருத்து அல்ல

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.
அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று.

என்றெல்லாம் கூறிய வள்ளுவர் பக்தியும், பூஜையும் வேண்டும் என்று கூறியிருப்பாரா?

மனத்துக்கண் மாசிலனாதல் அறம்; அஃதன்றி மற்றவை வீண் புறக்கோலமே என்று கூறி பக்தியும் பூஜையும் கூடாது, வேண்டாம் என்று கண்டித்தார் வள்ளுவர். பக்தியும் பூஜையும் தேவைஎன்று கூறிக் காரணம் காட்டுகிறார் ஆச்சாரியார். தம்முடைய வள்ளுவர் வாசகத்தைப் படிப்பவர்கள் பக்தியும், பூஜையும் செய்யவேண்டும் என்று எண்ணுகிறார், எனவே தம்முடைய கருத்தை வள்ளுவரின் மேல் ஏற்றிக் கூறுகிறார். இது பொருந்துமாறெங்ஙனம்?

தம்முடைய வைதிகக் கொள்கைக்கு ஆதரவு தேடத் தானா 'வள்ளுவர் வாசகம்' தீட்டிவருகிறார் ராஜாஜி.

வம்பர் இருவர்

மேட்டூர், கோலாகலன்.

எடுப்பு

வாதுக் கழைத்தார் இருவர்! – பாங்கனே,
வம்புக் கிழுத்தார் இருவர்!

உடன் எடுப்பு

காது வரைஓடும் கயல்க ளாம்அவை
கன்னியிடம் இரண்டு கண்ணுருவி லிருந்து
வாதுக்கழைத்தார்...

அடிகள்

வெட்டு(ம்)வாள் வேலையை அவைசெயல்
வம்பன்றோ?
வாயினைப் போல்அவை நகைத்தலும் வம்பன்றோ?
தட்டி நிறுத்தி ''என்ன சேதி''என் றேவினவி
தகுமொழி கூறுமுன் தாவிப் பறந்தோடி
வாதுக்கழைத்தார்...

நான்நோக்கும் போதில் எனையவை நோக்காது
நட்டுக் கிடக்கும் நிலத்தில்: நிமிராது!
வான்நோக்கி நான்என் விழிபெயர்க் கும்போது
வளர்ந்தஎன் தோள்மீது வண்டாகி
மொய்த்திடும்
வாதுக்கழைத்தார்...

ஒரு நூலுக்கு உரைஎழுத முற்படுவோர் நூல் ஆசிரியனின் கருத்திற்கு இணங்கவே எழுதிச் செல்ல வேண்டுமேயன்றி இடைஇடையே தம் சொந்தச் சரக்கை இடைச்செருகல் செய்வது முறையல்ல; அது அவர் ஏற்றுக் கொண்டிருக்கிற பணிக்கும் அழகல்ல.

வள்ளுவர் வாசகம் தீட்டும் ஆச்சாரியார் இக் கருத்தை உணர்ந்து தெளிய வேண்டும்.

குயில்

Regd No. M. 7030.

அவர் யாவர்?

ஒற்றுமை உள்ளவர் யாவர்? - வந்த
ஓரிகள் ஆரியர் ஆவர்.
கற்றும்கல் லாதவர் யாவர்? - தத்தம்
கட்சியால் வாழ்பவர் ஆவர்.
குற்றம் இழைப்பவர் யாவர்? - இனக்
கொள்கையை விற்பவர் ஆவர்.
சுற்றம் குலைப்பவர் யாவர்? - இனத்
தூய்மை இல்லாதவர் ஆவர்!

ஓரிகள் — நரிகளைப்போன்றவர்

தென்மொழிப் புலவர் யாவர்? - நாளும்
செத்துப் பிழைப்பவர் ஆவர்.
பன்மொழிப் புலவர் யாவர்? - இனப்
பகைவர்க் குத்துணை ஆவர்.
நன்மொழிப் புலவர் யாவர்? - அவர்
நாலைந்து பேர்மட்டும் ஆவர்!
இன்னல் தவிர்ப்பவர் யாவர்? - ஓர்
ஈ வே ரா என்பவர் ஆவர்.

தமிழைக் காப்பவர் யாவர்? - ஒரு
தாடி நரைத்தவர் ஆவர்.
தமிழர் தலைவர் யாவர்? - அத்
தந்தை பெரியார் ஆவர்.
சுமைக் கஞ்சாதவர் யாவர்? - அவர்
துன்பம் எண்ணாதவர் ஆவர்.
அமைவு செய்பவர் யாவர்? - நம்
அடிமை கொய்பவர் ஆவர்.

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.